# Gospel Truth

# காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 46 International Editor : MICHAEL W. SMITH இதழ் - 46


## எனக்கு பிறன் யார்

நியாய சாஸ்திரி ஒருவன் எழுந்திருந்து அவரை சோதிக்கும்படி போதகரே நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான்.
லூக்கா 10 : 25 – 37. இயேசு பிரதியுத்தரமாக நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதி இருக்கிறது என்றார். அதற்கு அவன் உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் பலத்தோடும் சிந்தையோடும் அன்பு கூர்ந்து உன்னிடத்தில் அன்பு கூறுவது போல பிறனிடத்தில் அன்பு கூறுவாயாக என்று எழுதி இருக்கிறது என்றான். இயேசு அவனை நோக்கி அப்படியே செய் அப்பொழுது பிழைப்பாய் என்றார். அவன் தன்னை நீதிமான் என்று காண்பிக்கும்படி எனக்கு பிறன் யாரென்று கேட்டான்.அந்த நியாய சாஸ்திரி யூதனாய் இருந்தான். அந்த நாட்களில் வாழ்ந்த யூத மதத் தலைவர்கள் யூதர்களாகிய மற்ற சகோதரர்களையே தங்களுக்குப் பிறன் என்று நினைத்தார்கள். பிறன் என்பவன் யூதர்களை பொருத்தமட்டில் சமாரியர்கள் ஆகிய புறஜாதியார் அல்ல. ஏனெனில் அவர்கள் சமாரியர்களை நாய்களாகவே எண்ணுவார்கள். யூதர்கள் சமாரியர்களை வெறுப்பதினால் தங்கள் பயண தூரமும் நேரமும் விரயமானாலும் யோர்தான் நதியை கடந்து பயணிப்பார்களே தவிர அவர்களுடைய நாடுகளின் வழியாய் பிரவேசிக்க மாட்டார்கள். இதை மனதில் கொண்டு இயேசு நல்ல சமாரியன் உவமையை கூறினார். ஒரு மனுஷன் எருசலேமில் இருந்து எரிகோவுக்கு போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான். அவர்கள் அவன் வஸ்திரங்களை உறிந்து கொண்டு அவனை காயப்படுத்தி குற்றுயிராக விட்டுப் போனார்கள். அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து அவனை கண்டு பக்கமாய் விலகிப் போனான்.

அந்தபடியே ஒரு லேவியன் அந்த இடத்துக்கு வந்து அவனைக் கண்டு பக்கமாய் விலகிப் போனான். பின்பு வந்த சமாரியனும் அவனைக் கண்டு மனதுருகி கிட்ட வந்து அவனுடைய காயங்களில் எண்ணையும் திராட்சை ரசமும் வார்த்து காயங்களை கட்டி அவனை தன் சுய வாகனத்தின் மேல் ஏற்றி சத்திரத்துக்கு கொண்டு போய் அவனை பராமரித்தான். மறுநாளிலே தான் புறப்படும் போது இரண்டு பணத்தை எடுத்து சத்திரத்தான் கையில் கொடுத்து நீ இவனை விசாரித்துக் கொள் என்று கூறி சென்றார். இப்படி இருக்க கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்று பேரில் எவன் பிறனாய் இருந்தான். உனக்கு எப்படி தோன்றுகிறது என்றார். அதற்கு அவன் அவனுக்கு இரக்கம் செய்தவனே என்றான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி நீயும் போய் அந்தபடியே செய் என்றார். தேவ பிள்ளைகளாகிய நாம் எல்லோரும் இந்த சமாரியர்களின் இதயத்தை உடையவர்களாக வேண்டும். யூதர்கள் சமாரியர்களை புறக்கணிக்கும் குணம் படைத்தவர்களாக இருந்த போதும், யூதனுக்கு அன்பும் அக்கறையும் தேவையாயிருந்தபோது உதவியது சமாரியனே. யூதர்கள் யூதர்களுக்கு உதவாமல் போனதை எப்படி உவமையாய் இயேசு கூறினார் பாருங்கள்.
இகழப்படுவோராகவோ இகழ்பவராகவோ நாம் தேவனுக்குள் கிடையாது. எல்லாரும் சமம். மதம் மொழி கலாச்சாரம் நிறம் ஜாதி இனம் என்று எந்த பாகுபாடும் இல்லாமல் அனைவரையும் நேசிக்க வேண்டும். கிறிஸ்தவ வாழ்வின் தூணாக கருதப்படும் இந்த உயரிய தேவ கட்டளையை பின்பற்றி தேவ பிள்ளைகளாகிய நாம் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக வாழ வேண்டும்.



**ஜாதி மதம், இனம் குலம் கோத்திரம் நிறம் தேசம் இவைகளை தாண்டி சக மனிதர்களிடம் அன்பும் கருணையும் உடையவர்களாய் நாம் மாற வேண்டும்.**


| | | | | |
|---|---|---|---|---|
| பன்முகத்தன்மையின் அழகு 2<br>தலையங்கம் 3 | வேதபாடம்<br>கிறிஸ்தவ சமத்துவம் (பாகுபாடு)<br>4 | துணை கட்டுரை<br>கிறிஸ்தவ சமத்துவமும் ஏற்றத்தாழ்வும்<br>5-6 | கேள்வி பதில்<br>கலப்பு திருமணம்<br>7 | உங்களுக்கு தெரியுமா?<br>ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை தொடங்கினவர் முடிய நடத்திவருவார்<br>8 |

# வேதாகமம்,




## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ; மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23, 1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4, எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1 :15-16 ; தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ; 1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ; வெளி 18 : 2-4

**நியமங்கள்**
மத் 28 : 19-20 ; 26 : 26-30 ; 1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ; 1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ; உபா 22 : 5


**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28, 29 ; 2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 : 23, 24 ; எபே 5 : 19 ; 2 கொரி 3 : 17

**சுவிசேம் அறிவித்தல்**
மாற் 16 : 15

## பன்முகத்தன்மையின் அழகு

தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாய் இருந்தது ஆதியாகமம் 1 : 31 ல் மரங்கள், மூலிகைகள், பூக்கள், பறவைகள் , கடல்வாழ் உயிரினங்கள், மிருக ஜீவன்கள் எல்லாம் வண்ணமயமானது. பன்முகத்தன்மையை நேசிக்கிற கர்த்தரிடம் இயற்கையும் பேசும் அழகும் ஆச்சரியமானது.மனுக்குலம் வேறுபட்டதல்ல எல்லோரையும் தேவன் தனித்துவமாக சிருஷ்டித்திருக்கிறார். மனுஷர்கள் வெவ்வேறு குணம் படைத்தவர்கள் தோற்றம் இயல்பு பலம் இவைகளில் எல்லோரும் மாறுபட்டவர்கள் தனிப்பட்ட வேற்றுமைகளோடு உலகம் எங்கும் வாழும் ஜனங்களின் கலாச்சாரம் இனங்களும் மாறுபட்டவையே. பன்முகத் தன்மையை தழுவிய ஒரு ஒற்றுமை தேவ பிள்ளைகளாகிய நம்மிடம் இருக்க வேண்டும் .



தேவனுடைய பார்வையில் எல்லா ஜனங்களும் ஒன்றே பன்முகத்தன்மையோடு கூடிய வாழ்க்கை சுவாரஸ்யமானது. தேவனுடைய ஆச்சரியமான கிரியைகளுக் காக அவருக்கு நன்றி செலுத்துவோம். பல்வேறுபட்ட இன மக்களின் பாரம்பரியமும் ஒருவரும் மற்ற இனத்தார் உடைய பாரம்பரிய பழக்க வழக்கங்களை குறை கூறாமல் பாராட்டத்தக்கதே.

மனுஷர்களை மையமாகக் கொண்டு கலாச்சாரங்கள் உலக அளவில் ஊக்குவிக்கப்பட வேண்டுமே தவிர கடவுளை மையமாகக் கொண்டு பாகுபடுத்தப்படக்கூடாது. கிறிஸ்தவர்கள் பல இன மக்களின் கலாச்சாரங்களை நாம் பழகியதை ஏற்றுக்கொள்ளும்போது எந்த விதத்திலும் ஆவிக்குரிய வாழ்விற்கு தடை ஏற்படாதபடி நடந்து கொள்ள வேண்டும். சமூகமும் கலாச்சாரமும் புரிந்துகொள்ளப்பட்டு பாராட்டப்பட வேண்டும். நன்மை தீமை அறிந்து அனைத்து நம்பிக்கைகளையும் பார்க்க வேண்டும் சுவிசேஷம் அறிவிப்பது கலாச்சாரங்களை அழிப்பதற்கு அல்ல எப்போதும் ஒரு கலாச்சாரம் மதிப்பானது கர்த்தருடைய வார்த்தைக்கு மேலாக ஆதிக்கம் செலுத்துகிறதோ அப்போது தேவபிள்ளைகள் எச்சரிப்பு பற்றி விழிப்படைய வேண்டும். தேவநீதிக்கு உட்பட்டு மனக்குலத்தின் கலாச்சார பன்முகத்தன்மை எப்போதும் போற்றப்படத்தக்கதே ■

---

அனைத்து இனம் சார்ந்த பாராபட்சமும் முறிக்கப்படும் நேரம் விரைவாக வரட்டும் கிறிஸ்து ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் அறிந்திருக்கிறார். அவருடைய பார்வையில் ஒவ்வொரு ஆத்மாவும் விலையேற பெற்றது
– F.G.ஸ்மித் ( தேவ சபை ஊழியர், 1901 )

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** *என்ற இணையதள முகவரியை பார்க்கவும். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :–*

**ஆயர். W.S.வேதா, காஸ்பெல் ட்ருத், 2/227, சர்ச் தெரு, கோலார்பட்டி , தென் இந்தியா - 642 107**

# ஆசிரியரின் தலையங்கம்

ஆதலால் மனுஷர் உங்களுக்கு எவைகளை செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்கு செய்யுங்கள் - மத்தேயு 7 : 12

வாழ்க்கையில் இதை ஒரு கட்டளையாக ஏற்றுக் கொண்டால் இந்த உலகமானது நல்ல உறைவிடமாகும். நீங்கள் உங்களை மற்றவர்களை எவ்வாறு நடத்த வேண்டும் என்று நினைக்கிறீர்களோ அப்படியே அவர்களுக்கும் செய்யுங்கள். செய்தியானது முழுவதும் சண்டைகள்,இனவெறி பாகுபாடுகள், மன்னிக்க இயலாத தன்மை, வெறுப்பு , வேறுபடுத்துதல் இவைகளை உள்ளடக்கியது. பன்முகத்தன்மை கொண்ட ஜனங்கள் மேல் கர்த்தருடைய அன்பும் தெய்வீக கிருபையும் இருப்பதால் சமாதானமும் இணக்கமும் மேலோங்கி இருக்கிறது. இந்த மாத காஸ்பெல் ட்ரூத் இதழின் தலைப்பு கிறிஸ்தவ சமத்துவம். தேவனாகிய கர்த்தர் நம் எல்லோரையும் ஒரே மாதிரியாகத்தான் சிருஷ்டித்திருக்கிறார். மொழி, உடல், நிறம், தகுதி இவைகளில் நாம் வேறுபட்டு இருந்தாலும், கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரையும் மரியாதையுடன் கூடிய அன்பு காட்ட மறக்க கூடாது.

தலைப்பை நான் தியானித்த பின் பல நாடுகளிலிருந்து பல இனங்களை சேர்ந்த அனைவரும் காஸ்பல் ட்ரூத் இதழில் பங்கெடுப்பதை பார்க்கிறேன். எல்லா நாடுகளிலும் மத ரீதியாக இனரீதியாக ஜாதி ரீதியாக ஒதுக்கப்படுதலை நான் நினைக்கிறேன். நாம் ஒருவரோடு ஒருவர் கருத்துக்களை பகிர்ந்து கற்றுக்கொள்ள வேண்டும். எப்படி இருப்பினும் கர்த்தர் எனக்கு ஒரு முடிவை தந்தார். நம் எல்லோருக்கும் நினைவுகள் உணர்வுகள் கதைகள் உண்டு. ஆனால் தேவனுடைய சத்தியத்தின் நியமமானது உங்கள் கதையோ என் கதையோ சார்ந்ததல்ல. அவைகள் நம் எண்ணங்களுக்கும் முடிவுகளுக்கும் அப்பாற்பட்டது. கிறிஸ்துவின் மீதுள்ள பற்றுதலைப் பார்க்கிலும் அதிகமாக கலாச்சார பழக்கவழக்கங்களுக்கு சாய்ந்து போவது ஒரு கிறிஸ்தவனுக்கு தகுதி அல்ல.

இந்த தலைப்புக்கு ஏற்ற எல்லா நிலைகளிலும் அனுபவம் உள்ள பல ஜனங்கள் விதிவிலக்குகளை மட்டும் கருத்தில் கொள்வர். தேவனுடைய வார்த்தைக்கு ஏற்ப நம் வாழ்வு அமைந்திருக்கிறதா என்று சிந்திப்போம். பாவத்தின் நிமித்தமாக அனைத்து விதமான ஜனங்களும் ஒரே விதமாக நடத்தப்படுவதில்லை .ஆகவேதான் அந்தஸ்து செல்வாக்கு, ஜாதி, நிறம் அடிப்படையிலான இத்தனை பிரிவினைகள் நம்மை சுற்றிலும் இருக்கின்றது. இது வட அமெரிக்கா, தென்அமெரிக்கா, ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா நாடுகளிலும் பரவலாக காணப்படுகிறது. என்ன ஏற்றத் தாழ்வுகள் நம்மை சுற்றி சமுதாயத்தில் காணப்பட்டாலும், நம்முடன் இருக்கிற ஒவ்வொருவரையும் கிறிஸ்தவர்களாகிய நாம் நேசிக்க வேண்டும். தேவசபைக்குள் கசப்புகளையும், சமூக ஏற்றத்தாழ்வுகளையும் கொண்டு வரக்கூடாது. தேவ கிருபையால் இதை மேற்கொள்ளுவோம். அநீதியும் குற்றப்படுத்துதலும் தேவனிடத்தில் இல்லை. உடல் நிறத்தைக் கொண்டு ஒருவரை வேற்றுமைப்படுத்தி பார்ப்பது தவறு. அவர்கள் கருப்போ, வெள்ளையோ, சிவப்போ எந்த வேறுபாடும் இல்லை. செல்வாக்கு மிகுந்தவர்களோ, ஏழையோ மற்றும் ஒரு சமூகத்தின் உயர் பதவியில் இருப்போர் தனக்கு கீழ் இருப்போரையோ இகழ்வாக கருத கூடாது. எப்படி இருப்பினும் ஐசுவரியவானும் ஏழையும் தேவ சமூகத்தில் ஒரே மாதிரியானவர்களே. என்னுடைய சொந்த தேசத்திலும் அயல்நாடுகளிலும் உடல் நிறத்தின் அடிப்படையிலான அநீதிக்கும் ஏமாற்றத்திற்குள்ளும் நான் கடந்து சென்றுள்ளேன். பாவ மனுஷர்களாலும் பெயரளவிலான கிறிஸ்தவர்களாலும் நான் புறக்கணிக்கப்பட்டதை எண்ணும்போது எனக்குள் ஒரு கோபம் உண்டாகும் . அப்போதெல்லாம் இயேசு நான் மன்னித்தது போல நீயும் கசந்து கொள்ளாமல் மன்னித்துவிடு என்று அதை மறக்க செய்வார். அதுதான் தேவநீதி. மன்னிப்பும் அன்பும் தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு தேவை .எல்லா மனிதர்களின் இருதயமும் ஒன்றுபட ஜெபிப்போம்.

ஆன்லைனில்

**அதிகமாக தெரிந்துகொள்ள**

*www.thegospeltruth.org*

**பதிவுசெய்து வெளியீட்டு காப்பகங்களுக்குள் உள்நுழைக**



# வேதபாட வழிகாட்டி

## பொருள் : கிறிஸ்தவ சமத்துவம் (பாகுபாடு)

**வேத வாசிப்பு :** நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே.ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்.கலாத்தியர் 3: 26 - 28

**வரையறை :** பாகுபாடு என்பது இரண்டு மனிதர்களை வேறுபடுத்தி பார்ப்பது.அல்லது ஒரு சமூகத்தை சார்ந்த உயர் வகுப்பினர் மற்ற தாழ்ந்த வகுப்பினருக்கு அநீதி செய்வது

**செய்திச் சுருக்கம் :** எல்லோரும் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள். அவருடைய பார்வையில் சமமானவர்கள். எல்லா மொழி, நிறம், இனம் ,தேசம், சமூக பொருளாதாரம் சார்ந்து அனைவருக்கும் சுவிசேஷம் என்பது பொதுவானது. இவ்வுலகப் பாகுபாடு,அநீதி அனைத்திற்கும் மேலாக நாம் ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டும்.

---

### I.தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள்

A.ஆதி 1:27 தேவன் தமது சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார்

B.மல் 2 :10 நாம் எல்லோருக்கும் ஒரே தகப்பன் உண்டு.

C. அப் 17 : 26 மனுஷ ஜாதியாரை ஒரே இரத்தத்தால் தோன்ற பண்ணினார்.

D.நீதி 22 : 2 ஐசுவரியவானையும் தரித்திரனையும் உண்டாக்கினவர் கர்த்தர்

### II. உலகளாவிய சுவிசேஷம்

A.யோவா 3 :16 தேவன் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

B.கலா 3:26-28 நீங்கள் கிறிஸ்துவின் உடையவர்கள்

C.வெளி 14 : 6 நித்திய சுவிசேஷம் அனைத்து பாஷைக்காரருக்கும் ஆனது.

D.வெளி 5 : 9 -10 சகல கோத்திரத்தாரும் மீட்கப்பட வேண்டும்

E.ரோமர் 10: 12 யூதன் என்றும் கிரேக்கர் என்றும் இல்லை

### III. பட்ச பாதம் இல்லாதவர்

A.அப் 10:34 - 35 தேவன் பட்ச பாதம் உள்ளவர் அல்ல (ரோமர் 2 :11)

B.யாக் 2 : 1-10 பட்ச பாதம் உள்ளவர்கள் பாவிகள்

### IV. பிரிவினையான நடுச்சுவர்

A.எபே 2: 11 -19 இருதிறத்தாரையும் ஒன்றாகி

B. அப் 10: 28 எந்த மனுஷனும் ஒன்றே

C.1 கொரி 12 : 25 சரீரத்தில் பிரிவினை இல்லை

### V. கிறிஸ்துவுக்குள் ஒன்றே

A. 1 கொரி 10 : 17 ஒரே அப்பம் ஒரே சரீரம்

B. 1 கொரி 12 : 12 -13 சரீரம் ஒன்று அவயவங்கள் அனேகம்.

C. ரோமர் 12 : 5 ஒருவருக்கொருவர் அவயங்களாயிருக்கிறோம்.

### VI.ஒன்றாயிருக்க வேண்டும்

A.யோவா 14 : 20 - 22 இயேசு அனைவரும் ஒன்றாய் இருக்கும்படி ஜெபித்தார்

B. சங்கீதம் 133 : 1-3 ஒருமித்து வாசம்பண்ணுகிறது

C. பிலி 2: 3-5 ஒருவரை ஒருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவர்கள்

### VII.அன்பாயிருங்கள்

A. யோவான் 13: 34- 35 நீங்களும் ஒருவரில் ஒருவர் அன்பாயிருங்கள் எனும் புதிதான கட்டளை

B. 1 தெச 3 : 12 - 13 அன்பிலே பழகுங்கள்

C. 1 பேது 1 : 22 சுத்த இருதயத்தோடே ஒருவரில் ஒருவர் அன்பு கூறுங்கள்

D.1 பேது 3 :8- 9 மன உருக்கமும் இணக்கமும் உள்ளவர்களாக இருங்கள்.

E. 1 யோவா 3: 14 - 18 சகோதரர் இடத்தில் அன்பு கூறுகிறபடியால் மரணத்தை விட்டு நீங்குவான்

### VIII . நீதியுள்ள நியாயத் தீர்ப்பு

A. லேவி 19: 15 ஞாயிறு விசாரணையில் அநியாயம் செய்யாதீர்கள்

B. யோவா 7 : 24 நீதியின் படி தீர்ப்பு செய்யுங்கள்

### IX.தவறான அபிப்பிராயத்திற்கு தக்க பலன்

A. மாற் 11 : 25 - 26 குறையை மன்னியுங்கள்

B. 1 தெச 5: 15 தீமைக்கு தீமை செய்யாதபடி பாருங்கள்

C.மத் 5 : 43 -44 அன்பு,ஜெபம், நற்கிரியை

D.எபி 12: 14- 15 கசப்பான வேர் முளைக்கக் கூடாது

### X.இவ்வுலகத்திற்குரியது அல்ல

A. யோவா 17: 15- 17 உலகத்தார் அல்ல

B.ரோமர் 12: 2 இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரிக்காதிருங்கள்

**முடிவு :**

ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; பிலி 2: 3-5



# கிறிஸ்தவ சமத்துவமும் பாரபட்சமும்

இந்த சந்ததியின் கலாச்சார பழக்க வழக்கங்களை இயேசு கிறிஸ்துவின் போதனை மாற்றி அமைக்கிறது. பாரபட்சமும், ஏற்றத்தாழ்வுகளும் அநீதியும் வெறுப்பும் ஆரம்ப முதலே இருந்து வருகிறது .ஆயினும் அன்பு, மன்னிப்பு, சமத்துவம், சமாதானத்திற்கான தூண்டுகோலாக தேவன் எழுந்தருளினார்.



**கிறிஸ்தவர்கள் ஒருதலை பட்சமாகவோ அல்லது பாகுபாடு காட்டுபவராக இல்லாமல் எல்லா ஜனங்களையும் கண்ணியமாக நடத்த பழக வேண்டும்.**

### தேவனுடைய சிருஷ்டிப்பு

மொழி, இனம், நிறம், கலாச்சாரம்,சமூக பொருளாதாரம், தேசம் என எல்லாவற்றிலும் வேறுபட்டிருந்தாலும் கிறிஸ்துவின் பார்வையில் நாம் சமமானவர்களே .தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார் ஆதி 1 : 27 பாவத்தினாலே உலகம் எங்கும் உள்ள ஜனங்களின் ஒவ்வொரு சந்ததியரும் பாரபட்சமுள்ளவர்கள் ஆகிவிட்டார்கள். எப்படி இருப்பினும் நம் எல்லோருக்கும் ஒரே தகப்பன் உண்டு. மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணினார் அப் 17 : 26 மனுக்குலமானது வெளிப்புற தோற்றத்தில் மட்டுமல்ல, சட்டம் பாரம்பரியம், பழக்கவழக்கம், தனித்தன்மை என பல விதங்களில் வேறுபடுகிறது. ஆயினும் நாம் அனைவரும் ஒரே வழி தோன்றல்களே. நீதி 22 : 2ல் ஐசுவர்யவானும் தரித்திரனும் ஒருவரை ஒருவர் சந்திக்கிறார்கள். அவர்கள் எல்லாரையும் உண்டாக்கினவர் கர்த்தர் என்று சொல்லப்பட்டுள்ளது.

### உலகளாவிய சுவிசேஷம்

மீட்பின் சுவிசேஷம் அனைவருக்கும் பொதுவானது. தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் (யோவான் 3 : 16).இயேசு கிறிஸ்து உலக ஜனங்கள் எல்லோருக்காகவும் மதித்தார். அப்போஸ்தலர் யோவான் தான் கண்ட தூதனிடம் சகல ஜாதிகளுக்கும் ஜனக் கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாய் இருந்து (வெளி 14: 6). பவுல் எழுதுகையில் கிறிஸ்து இயேசுவுக்குள் நாம் எல்லோரும் விசுவாசத் தினாலே ஒன்றாக்கப்பட்டிருக்கிறோம். யூதன் என்றும் கிரேக்கன் என்றும் இல்லை அடிமை என்றும் சுயாதீனன் என்றும் இல்லை. ஆண் என்றும் பெண் என்றும் இல்லை நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாய் இருக்கிறீர்கள் கலாத்தியர் 3 : 26-28.

### தேவன் பட்ச பாதம் உள்ளவர் அல்ல

பேதுரு யூதர்களுக்கும் புறஜாதிகளுக்கும் உள்ள வித்தியாசத்தை நன்றாக அறிந்தவர் எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்.எல்லாருக்கும் கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவைக்கொண்டு அவர் சமாதானத்தைச் சுவிசேஷமாய்க் கூறி, இஸ்ரவேல் புத்திரருக்கு அனுப்பின வார்த்தையை அறிந்திருக்கிறீர்களே. அப் 10:34 - 35. பவுலும் கூட ரோமர் 2: 11 ல் தேவனிடத்தில் பட்ச பாதம் இல்லை என்கிறார். தேவன் எல்லோரையும் நேசிக்கிறார். செல்வம் அந்தஸ்து நிறம் மொழி குடும்பம் சார்ந்து பாகுபாடு காண்பிப்பவர் அல்ல . கிறிஸ்தவர் களும் கூட நம்மோடு பயணிக்கிற சக மனிதர் களை அவ்வாறே நேசிக்க வேண்டும். யாக்கோபு கூறுகையில் பட்ச பாதம் உள்ளவர் களாக இருப்பீர்களானால் பாவம் செய்து மீறினவர்கள் என்கிறார் (யாக் 2 : 1- 10). இது அனைத்து கிறிஸ்தவர்களுக்குமான அறிவுரை. பாரபட்சம் எந்த விதத்தில் காணப்பட்டாலும் அதாவது ஜாதி இனம் மொழி கலாச்சாரம் எதுவாக இருந்தாலும் தேவ வார்த்தை பொதுவானது. சக மனிதர்களை நேசிக்கவும் பாரபட்சம் காட்டாமலும் மதிக்கவும் கிறிஸ்தவர்கள் பழக வேண்டும்

### பிரிவினையின் நடுச்சுவர்

யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் இருந்த பிரிவினையின் சுவர் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே தகர்க்கப்பட்டது .முன்னே மாம்சத்தின் படி புறஜாதியாராக இருந்து சட்ட திட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை ஒழித்து பரிசுத்தவான்களுடைய ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாய் இருந்து (எபேசி 2 :11 -19). கிறிஸ்துவுக்குள் எந்த பாகுபாடும் ஏற்றத்தாழ்வும் இல்லை (1 கொரி 12 : 25). இனம் நிறம் அந்தஸ்து செல்வாக்கு அடிப்படையிலான பாகுபாடு ஏற்படுத்தப்படக்கூடாது. அப்போ 10 : 28 ல் பேதுரு யூதனானவனுக்கு விலக்கப்பட்டு இருக்கிறது என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் அப்படி இருந்தும் எந்த மனுஷனையும் தீட்டு உள்ளவன் என்றும் அசுத்தன் என்றும் நான் சொல்லாதபடிக்கு தேவன் எனக்கு காண்பித்திருக்கிறார் என்றார்.

### கிறிஸ்துவுக்குள் ஒன்றே

உலகம் பிரிவினையை உண்டாக்கினாலும் வேதம் சொல்கிறது தேவபிள்ளைகளிடத்திலே ஒரு மனம் காணப்பட வேண்டும். அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாய் இருக்க ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக் கிறோம். ரோமர் 12 : 5 நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே

ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம். 1கொரி 12 :13. ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். பிலி 2: 3



**சமுதாய ஏற்றத்தாழ்வுகளை சகிப்பது கடினமான விஷயம் என்றாலும் எரிச்சலோடோ மன்னிக்க இயலாத குணமோ நம்மிடம் இருக்கலாகாது.**

### சகோதர சிநேகம்

ஒருவரில் ஒருவர் அன்பு கூறுங்கள் என்ற இயேசுவின் கட்டளையை (யோவான் 13 :34) ல் பார்க்கலாம். தன் சகோதரனிடத்தில் அன்புகூறுகிறவன் ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் (1யோவான் 3: 14). பேதுரு கூறுகையில் நீங்கள் எல்லாரும் ஒருமனப்பட்டவர்களும் சிநேகம் உள்ளவர்களும் (1 பேதுரு 3 :8-9). இயேசுவின் தெய்வீக அன்பு, பிரிவு, பாகுபாடு, ஏற்றத்தாழ்வு, இனம் இவைகளுக்கு அப்பாற்பட்டது. தேவ அன்பை உள்ளத்தில் பெற்றவர்கள் சக மனிதர்களை மரியாதையுடன் நேசிக்க வேண்டும்.

### நீதியுள்ள நியாய தீர்ப்பு

நியாயங்கள் நம் வாழ்க்கையில் விசாரிக்கப்படும் போது செல்வாக்கு அல்லது மற்ற எந்த காரணத்தையும் கொண்டு நியாயம் தீர்க்கக் கூடாது

லேவியர்களின் நியாயப்பிரமாணம் சொல்கிறபடி நியாயவிசாரணையில் அநியாயம் செய்யாதிருங்கள்; சிறியவனுக்கு முகதாட்சிணியம் செய்யாமலும், பெரியவனுடைய முகத்துக்கு அஞ்சாமலும், நீதியாகப் பிறனுக்கு நியாயந்தீர்ப்பாயாக (லேவி 19: 15). கிறிஸ்து போதிக்கும்போது தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாமல், நீதியின்படி தீர்ப்புசெய்யுங்கள் என்றார்(யோவான் 7 : 24) .சத்தியத்தின்படி நியாயம் தீர்க்க வேண்டும்.

### தவறான அபிப்பிராயத்திற்கு தனிப்பட்ட பலன்

சில மனிதர்கள் சக மனிதர்களை ஒரே மாதிரியாக எண்ணுவதில்லை. சமத்துவம், அன்பு, கனம் இவைகளையே வேதம் நமக்கு போதிக்கிறது. கிறிஸ்தவன் வேதத்திற்கு கீழ்ப்படிந்து வாழ்ந்தாலே சமுதாயத்தில் மாற்றம் வந்திருக்கும். கிறிஸ்தவர்களாய் நமக்கு சமுதாயத்தில் அநீதி நேரிடும் போதோ அல்லது பாரபட்சம் பார்க்கப்படும் போதோ நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் எனவும் வேதம் நமக்கு போதிக்கிறது. நீங்கள் நின்று ஜெபம்பண்ணும்போது, ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள். நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார் என்றார். (மாற்கு 11 : 25 - 26) .

தேவனுடைய பரிசுத்தவான்கள் தேவ சத்தியத்தின் படி நம்மை அவமதிப்பவர் களையும் மன்னிக்க பழக வேண்டும். ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள்; உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள். 1தெச 5 : 15 உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக் காகவும் ஜெபம் பண்ணுங்கள். மத் 5 : 43 -44 . யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர் களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.எபி 12: 14- 15 இருதயத்தில் கசப்பு தோன்ற மிக முக்கிய காரணமே சமுதாய ஏற்ற தாழ்வுகளே. பரலோக பாக்கியத்தை பெற சத்தியத்திற்கு கீழ்படிவது முக்கியம்

### இவ்வுலகத்திற்கு உரியதல்ல

நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.யோவான் 17 :15 . தீமை சமுதாயத்தில் பரவலாக காணப்படுகிறது ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமான பிரிவினைகள் இருக்கிறது. மாம்சீகத்தின் படி இந்த பிரிவினைக்கு எதிராக கிறிஸ்தவர்களாகிய நாம் எழும்ப வேண்டும். நாம் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரிக்கலாகாது ரோமர் 12 : 2 கனம், அன்பு, மன்னிப்பு, கண்ணியம் இவைகளுக்கு முன்மாதிரியாக நம் வாழ்க்கை இருக்க வேண்டும். கசப்புக்கும் பாகு பாட்டிற்கும் இடம் தரலாகாது. இவ்வுலகத்தின் மாம்சீக இச்சைகளுக்கு உடன்படாமல் பரிசுத்தமாய் வாழ ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்கும் தேவன் கிருபை செய்வாராக. ■

# கேள்வி ? பதில்!



## கலப்பு திருமணம் குறித்து வேதம் நமக்கு போதிப்பது என்ன

பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணம் ஆனது இஸ்ரவேல் ஜனங்கள் கானானியர்களின் தேசத்தில் வாசம் பண்ணும் போது அவர்களுடைய குமாரத்திகளை பெண் கொள்வதை தடை செய்கிறது (யாத்திராகமம் 34 : 14 - 16) . தேவன் கலப்பு திருமணத்தை ஊக்குவிக்கவில்லை. தேவன் இந்த நியமத்தை சொல்ல காரணம் நிறமோ, இனமோ இல்லை. மாறாக அவர்கள் அந்நிய தேவர்கள் மேல் இஸ்ரவேலர்களை சோரம் போகப் பண்ணுவார்கள் என்று வேதம் கூறுகிறது. அவர்களோடே சம்பந்தம் கலவாயாக. என்னை பின்பற்றாமல் அந்நிய தேவர்களை சேவிக்கும்படி அவர்கள் உன் குமாரரை விலகப் பண்ணுவார்கள் (உபாகமம் 7: 1- 4). தேவன் தம்முடைய ஜனங்கள் பரிசுத்த ஜாதியா யிருக்கும்படி விரும்புகிறார் .இஸ்ரவேலர்கள் தேவனுடைய உடன்படிக்கையை மீறி மற்ற தேசம் மற்றும் ஜாதியாரின் பெண்களை விவாகம் செய்ததின் விளைவாக விக்கிரகத்திற்கும் பேய் வணக்கத்திற்கும் அடிபணிந்தார்கள். தீர்க்கதரிசிகள் ஜனங்களின் இந்த மீறுதலுக்காக தேவனிடத்தில் புலம்பி மன்றாடினார்கள். (மல்கியா 2 : 11 ; எஸ்றா 9 : 1 2) யூதா ஜனங்கள் துரோகம் பண்ணினார்கள். சாலமோன் ராஜா இதற்கு மிகச்சிறந்த உதாரணம்.சாலொமோன் வயதுசென்ற போது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்; 1 ராஜாக்கள் 11 : 1-5 .கோத்திரம், ஜாதி என்ற பாகுபாட்டால் இஸ்ரவேலருக்கும் மற்ற தேசத்தாருக்கும் விவாகம் தடை செய்யப் படவில்லை. இவர்கள் அந்நிய தேவர்களை வணங்கும்படி சோரம் போகிறார்கள். புதிய ஏற்பாடும் கூட இதே காரியத்தை வலியுறுத்துகின்றது. அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப் பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக் கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?2 கொரி 6 :14 -15. மனித உறவின் பிணைப்புதான் திருமணம். மோசே முதலாவது, மீதியான் தேசத்து பெண்ணையும் பின்பு எத்தியோப்பியா தேசத்து பெண்ணையும் மணமுடித்தார். மிரியாமும், ஆரோனும் மோசேயின் விவாகத்துக்கு எதிராக பேசினார்கள். தேவனோ மோசேயின் மீது கோபங் கொள்ளாமல் மிரியாம் மீது கோபப்பட்டார். மிரியாம் குஷ்டரோகியானாள் எண் 12 :1 ,9- 10 வேதாகம விரிவுரையாளர் ஆல்பர்ட் பர்னஸ் பின்வருமாறு எழுதுகிறார் நோவாவின் மகனான காமின் சந்ததியில் வந்த ஸ்திரீயை மோசே விவாகம் செய்தது தடை செய்யப்படவில்லை. அவள் கானானிய ஸ்திரீயல்ல. கோத்திரத்தின்பால் பற்று கொண்ட யூதர்களுக்கு அது தண்டனைக்குரிய குற்றமாகும். கிறிஸ்தவ தகப்பன்மார்கள் ஒன்றை மோசேயின் விவாகத்திலிருந்து அறிந்து கொள்ள வேண்டும். முதலில் மீதியான் தேசத்து ஸ்திரீ.பின் எத்தியோப்பியா தேசத்து பெண். ஆகையால் வரப்போகிற புதிய உடன்படிக்கையான புறஜாதியாருக்கு முன் அடையாளமாகவும் புறஜாதியாரும் வாக்குத்தத்திற்கு புறம்பானவர்கள் அல்ல என்றும் தெரிகிறது.

புதிய ஏற்பாட்டில் இன்னும் அநேக ஜாதி யாரும் இனத்தாரும் இருப்பினும் யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை; எல்லாருக்கும் கர்த்தரானவர் தம்மைத் தொழுது கொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார்.ரோமர் 10: 12 ரூத் மற்றும் ராகாப் இயேசு கிறிஸ்துவிற்கு முன் சந்ததியராக காணப்படுகிறார்கள். ஒரே இரத்தத்தினாலே எல்லோரையும் தோன்ற பண்ணினார். அப்போஸ்தலர் 17 : 26 புதிய ஏற்பாட்டில் கலப்புத் திருமணங்கள் தடை செய்யப்படவில்லை. விவாகம் மிக முக்கியமானது .ஆனால் அனேக நடைமுறை பழக்க வழக்கங்கள் உண்டு. அனேக ஜெபங்களும் ஆலோசனைகளும் திருமண வாழ்க்கைக்குள் நுழையும் முன் ஏறெடுக்கப்பட வேண்டும். வாழ்க்கை துணையை தேர்ந்தெடுக்கும் முன் கிறிஸ்துவின் மேல் உங்கள் விசுவாசத்தை வையுங்கள். இதுவே வேதாகம நிலைப்பாடு நிறம் ஜாதி மதம், இனம் இவைகளை எல்லாம் தாண்டி விசுவாசித்து ஜெபித்து திருமணம் செய்யுங்கள். குடும்ப உறவுகள், சமுதாய அழுத்தங்கள், எதிர்கால சந்ததி யாவும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். அனேக கலாச்சார பாரம்பரிய பண்பாடுகளோடு கூடிய சமூகத்தில் கலப்புத் திருமணங்கள் மேற்கொள்வது மிகச் சிக்கலான சூழ்நிலையை உண்டாக்கி விடுகிறது. பொருந்தக்கூடிய குணங்கள் ஞானத்தோடு ஆராயப்பட வேண்டும். இடத்திற்கு இடம் சூழ்நிலைக்கு சூழ்நிலை இது மாறுபடும் ■

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide Indian Constitution Act 25th & 19(1) Section
TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY

உங்களுக்குத் தெரியுமா?

உலகம் முழுவதிலும் சமுதாய ஏற்றத்தாழ்வுகள் மிக மோசமான பாதிப்பை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. 2021 – 2022க்கு இடைப்பட்ட காலகட்டத்தில் ஆராயப்பட்டதில் சுமார் 70 சதவீதத்துக்கும் அதிகமான நாடுகளில் சமுதாய ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றது என்று உலக நீதி அறிக்கை ஆராய்ச்சி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது. 3/4 பகுதி நாடுகளில் இவை அதிகரித்துக் கொண்டே செல்கிறது

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## கிறிஸ்துவுக்குள் அடையாளம்

நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், ரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் 1 பேதுரு 2: 9



தெரிந்து கொள்ளப்பட்ட மற்ற எல்லா ஜாதியாரை பார்க்கிலும் இஸ்ரவேல் சந்ததியார் தேவனுக்கு சிறப்பான சொந்த ஜனம். அவர்கள் மற்ற ஜாதிகளினின்று வேறு பிரிக்கப்பட்டவர்கள் .ஆகவே கர்த்தரை சிறப்பாக தொழுது சேவிக்க கடமைப்பட்டவர்கள். ஆகவே தங்களுடைய அடையாளத்தை அவர்கள் கறைப்படுத்தி விடாமல் விக்கிரகத்தை சேவித்து விடாமல் தங்களை பரிசுத்தமாய் காத்துக்கொள்ள வேண்டும்

தேவனுடைய பொக்கிஷமான யூத ஜனங்கள் தனித்துவமானவர்கள். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே நாமல்லாரும் மீட்கப்பட்டோம். தேவனுடைய மன்னிப்பை பெற்று பாவத்திலிருந்து மீட்கப்பட்ட நாம் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக இருக்கிறோம். தேவனுடைய ராஜ்யத்தின் குடிமக்களாக கிறிஸ்து இயேசுவுக்குள் புது அடையாளங்களை பெற்றிருக்கிறோம். நாம் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் ராஜரீகமான ஆசாரிய கூட்டமுமாய் இருக்கிறோம். உலக ஜனங்கள் தங்களுக்கென ஒரு அடையாளத்தை தேடுவதுண்டு. மத வைராக்கியம் பாராட்டும் ஜனங்களே பாரபட்சம் பார்க்கிறவர்களாக இருக்கின்றனர். உண்மையான சமாதானத்தை தங்கள் இருதயத்தில் கொண்டிராத ஜனங்களாய் அவர்கள் இருப்பார்கள். தவறான அடித்தளம் போடப்பட்டு சுய அவமானம் கர்வம், பெருமை மனமேட்டிமை வெறுப்பு தவறான தகவல்கள் புறக்கணிக்கப்படுதல் இவைகளை கொண்டவர்களே, அடையாளத்தை விரும்புகிறவர்கள்.
பூமிக்கு உரிய அடையாளங்களாக நமக்கு என்ன இருந்தாலும் தேவனுக்குள் நாம் முதன்மையான அடையாளமாக அவருடைய பிள்ளைகளாக விளங்க வேண்டும். பல சோதனைகளின் மத்தியிலும் நாம் யார் என்பதை மறந்து போய்விடக்கூடாது. அவரால் சிருஷ்டிக்கப்பட்ட நாம் சமாதானமாய் வாழவே அவர் விரும்புகிறார். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட நாம் சமுதாயத்தின் அடையாளத்தை ஏற்க வேண்டியது இல்லை. நித்திய ஜீவன் வரைக்கும் என் இயேசு கிறிஸ்துவின் அடையாளத்தை காத்து நடக்கக்கடவோம் ■

CONTACT :-

The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.

Email :
vedhacog1954@gmail.com

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

THE CHURCH OF GOD *Worship Place:*

**Church Street, Kolarpatti, Pollachi - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - 642 107**

SUNDAY SERVICE : 10 AM - **ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எந்த சபைக்கும் போகாதவர்கள் எங்களுடன் பரிசுத்த ஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

**Come & Worship with Real Truth**

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 CHURCH STREET,-KOLARPATTI & P.O, SOUTH INDIA - 642 107. Cell : 0091 95975 62641.
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316